புதினப்பத்திரிகையாகப்
பதிவுசெய்யப்பெற்றது

இந்துசாதனம்.

[illegible] (1889)

THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

பத்திரிக் கிரயம்.

யாழ்ப்பாணப் பட்டினம்:	௵ 1-க்கு ரூ.	5-60
வெளியூர், இந்தியா:	,, ரூ.	9-40
தொலைவாயப்பகுதி:	,, ரூ.	9-40
தனிப்பிரதி:	சதம்	6

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.

முதன் முறைக்கு:--ஒருகலம்	ரூ.	9-40
,, அரைக்கலம்	ரூ.	5-00
,, கால்கலம்	ரூ.	3-15
,, ஒரு அங்குலம்	சதம்	65

அடுத்த முறைகட்கு மேற் விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினாலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—௩௭ } யாழ்ப்பாணம்:—அக்ஷய௵ வைகாசி௴ ௧௮௳ (1926 மே 31) திங்கட்கிழமை { இலக்கம்—௪௧.

உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கி வாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

சுரத்தை நீக்கும் அற்புதமான மருந்து

குளிர் (தூலேப்பன்) காய்ச்சல் முதலிய சகல விதமான சுரங்களையும் டக்டர் மைக்கோயின் "சுரசங்காரி" ஔஷதம் உடனே மாற்றிவிடும். டக்டர் மைக்கோயின் சுரசங்காரி யென்னும் மருந்து எவ்வகைச்சுரத்தையும் மந்திரவசத்தால் மாற்றுவதுபோல உடனே மாற்றிவிடுகின்றது மற்றும் வைத்தியர்களினால் மாற்றமுடியாத நெடுநாட்பட்ட எவ்வகைச்சுரமும் இந்த மருந்தில் நாலு மூன்று போத்தலை உபயோகிப்பதனால் முற்றாக மாறிவிடுகின்றது. ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். ஒருபோத்தல் கொண்ட மருந்தின்விலை ரூபா 1 சதம் 50. இம் மருந்து கொழும்பு கார்ஜில்ஸ் (Cargills Ltd.) கம்பனியிலும் மற்றும் மருந்துச்சாலைகளிலும் பெறற்பாலது (Y 47)

HAKEEM K. MOHAMED YOOSOOF,
MUHAMMEDIA MEDICAL HALL,
PORTO-NOVO. S. A. Dt. [India.]

ஓ! நண்பர்காள்!

நமது வைத்தியசாலைக்கு நேரில் வந்து பணத்தைப்பற்றிக் கவனிக்கவேண்டாம். வீரிய விர்த்திக்காக முதற்றரமான லேகியம் வேணுமென்றுகேட்கும் கனவான்களுக்குமட்டும் இதைத் தனியாகச் செய்து கொடுத்துவந்தோம். இப்போது எல்லா ஜனங்களும் இதன் சுகத்தை அடையும்படி இப்பத்திரிகை மூலமாய் வெளிப்படுத்தியிருக்கிறோம்.

உலகத்தில் வெளிவந்திருக்கும் லேகியங்களுக்கெல்லாம் மகுடம்

இராஜ தத்துவ லேகியம்

இழந்துபோன பலத்தையும் தளர்ந்துபோன நரம்புகளையும் ஒரேவேளை லேகியம் சாப்பிட்ட பிறகு இதற்குச் சமமாய் எதைக் கட்ட முடியும்

இந்த லேகியம் சாப்பிடுகிறவர்கள் இதற்குச் சமமான லேகியம் காட்டுவார்களானாலும் சரி, அல்லது இதிற் சொல்லப்பட்ட குணங்கள் அவ்வளவாக இல்லையென்று ரூபிப்பார்களானாலுஞ் சரி [illegible] கொடுத்துவிடப்படும்.

உத்தரவாதமுள்ள சத்திய ஔஷதம்

வீரியத்துவத்தையும் நாடி நரம்பு முதலியவைகளின் உற்சாகத்தையும் கொடுத்துத் தேக காங்கையினால் நீற்றுப்போகும் வீரியத்தையும் 2 வேளை மருந்தில் குணப்படுத்தும்: மூளையைப் பலப்படுத்தி ஞாபகசக்தியைத் தரும்; பற்பல வாய்வுரோகம், இடுப்புவலி, கைகால்சந்து, மலச்சிக்கல் இவைகளை சுசப்படுத்துவதில் முதற்றரமான மருந்தென்று தங்கள் சிநேகிதர்பால் புகழ்ந்து பேசுவீர்கள். பத்தியமில்லை.

ஒரு ரூத்தல் கொண்ட டப்பி 1-க்கு விலை ரூபா 10—0—0.
அரை ரூத்தல் கொண்ட டப்பி 1-க்கு விலை ரூபா 5—1—0.
கால்ரூத்தல் கொண்ட டப்பி 1-க்கு விலை ரூபா 2—12—0.
வி. பி. செலவு வேறு.

நமக்கு நேரில் ஆர்டர்செய்தால்மட்டில் இந்தலேகியம் கிடைக்கும்; மற்றவரிடம் கிடைக்காது.

விலாசம்: ஹக்கீம் கா. முகம்மதுயூசுபு,
முகம்மதியா வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.

(Y. 54.)

வீடுவேயும் ஓடுகளை
நீங்கள் எங்கேவாங்குகிறீர்கள்?

திறமான ஓடுகளைத் தெரிவுசெய்யும்போது
பிரதானமான மூன்று விஷயங்களை
நீங்கள் கவனிக்கவேண்டும்.

முதலாவது பாரமின்மை;
இரண்டாவது நெடுங்கால உபயோகம்;
மூன்றாவது உங்கள் தேச சீதோஷ்ண ஸ்திதி.

எங்கள் ஸ்ராண்டேட் ஓடுகள்

ஸ்ராண்டேட் ஓட்டுக் கொம்பனியாரால் செய்யப்பட்டன.

மேலே சொல்லப்பட்ட மூன்று தன்மைகளும் இவைகளிடத் துள்ளன

இப்பொழுது உலகத்திலே உண்மையாகத் திறமையான ஓடுகள்.

இவற்றை உபயோகித்தவர்கள்
அதிகமாக விரும்புகிறார்கள்.

1921-ம் வருடம் நாங்கள் இந்த ஓடுகளை விற்கும் உரிமையைப் பெற்றபின் உண்டான அதிக விற்பனையினால் இவற்றின் பிரஸ்தாபம் எங்கெங்கும் பரக்கின்றது.

ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள்!

பின்வரும் விலாசத்தாருக் கெழுதுக:

எஸ். வீரகத்திப் பிள்ளை,
விற்கும் உரிமையுடையவர்,
யாழ்ப்பாணம்

(H. 47.)

சிவஞானசித்தியார் சுபக்கம்
மூலமும் பொழிப்புரையும்

இரண்டாம் பதிப்பு.

முதற்பதிப்பு 360 பக்கந்தான். இப்பதிப்பு 180 பக்கம் அதிகமாகச் சேர்த்து 540 பக்கத்தில் உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிட்டு முழுக் கலிக்கோ பைண்டு அழகாகச் செய்யப்பெற்றிருக்கிறது. ஒவ்வொரு செய்யுளுக்குள்ள குறிப்புக்களும், அனுமானக் குற்றம் அறுபத்தைந்தும், பாதிவிருத்தமிதுவென்பதும் இனிது விளக்கப்பெற்றிருக்கின்றன. தத்துவப்படம் தாத்துவிகப்படம் அத்துவப்படங்களும், பல அகராதிகளும் உள்ளன. அதிகப் பிரதிகள் அச்சிடவில்லை. வேண்டுவோர் நம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். விலை ரூ 2-8-0.

சிவஞானபோதச்சிற்றுரைவிளக்கம் 3—8—0
சருவஞானோத்தர ஆகமஞானபாதம்
தமிழ்மூலமும்முத்திரத்தின
விருத்தியுரையும் 1—8—0
தசகாரிய விளக்கம் 0—8—0

தபாற் செலவு வேறு.

பொ. முத்தையபிள்ளை,
சிவாகமசங்கம்,
சகராசிவன்கோவில்,
தேவகோட்டை.

(Q. 70.)

பத்திரிகாபிமானிகள் தங்களால் வரவேண்டிய பத்திரக் கிரயத்தைத் தயைசெய்து காலதாமசமின்றி அனுப்பிவைப்பார்களாக.

AWARDED 1st CLASS GOLD MEDAL TO C. MALAYAPPA SAMI PILLAI PALNI
BY THE MEDICAL CONFERENCE AND EXHIBITION MADRAS 1923
AWARDED 1st CLASS GOLD MEDAL
BY THE TAMIL MEDICAL CONFERENCE AND EXHIBITION HELD IN MADRAS 1923

25—8—1923-ல் சென்னையில் நடந்த தமிழ்வைத்திய கான்பரன்ஸ் அண்டு மருந்துக் கண்காக்ஷியில் முதல்தர தேவஸ்தான ஸநந்தங்களெனத் தங்க மெடலும் வைத்தியபதிப் பட்டமும் பெற்ற அநேக பரிசுகள், மெடல்கள், நற்சாட்சிகள் பெற்று உலகங்கும் புகழ்பெற்றது.

சூலை, குஷ்டம், ரணம், மேகம் முதலிய சகல வியாதிக்குங் கைகண்டது.

தங்கக மெடல்கள் பெற்ற பழனி சி. எம். சாமி

குரு தாம்ர பஸ்பம்.

முப்பூவினால் சுருக்கு நீற்றியது; களிம்பற்றது; வாந்தி முதலிய கெடுதிகள் ஒன்றுஞ் செய்யாதது; பத்தியமில்லை. வியாதிகளை விபரமாய் எழுதவும்.

எந்த மருந்தினும் தீராத வியாதிகள் இதில் அவசியந் தீரும். மறுமுறை வியாதி திரும்பி வராது. இது சகல வியாதிகளையும் வேரற நீக்கும் சக்தி வாய்ந்தது.

சூலை, குஷ்டம், கிரந்தி, ரணம், மதமதப்பு, தடிப்புகள், கிரந்திகள், பத்துகள், கைகால் ரணங்கள், குன்மம், மேகம், பவுத்திரம், கண்டமாலை, சூலைநீர், குறைநோய்சம்பந்தவியாதிகள், விரல்கள் அழுகிப்போயிருந்தாலுஞ்சரி அம்மட்டில் ஆறிவிடும். இது குஷ்டம், கருமேகம், வெண்மேகம், செம்மேகம்முதலியவைகளுக்குமகா அருமையானது. இதுபோன்றமருந்து எங்குங்கிடைப்பதரிது.

80 வேளை மருந்து ரூபா 40. 40 வேளை மருந்து ரூபா 20. 20 வேளை மருந்து ரூபா 10. அனுபானங்கள் 80 வேளைக்கு ரூபா 10. ஏழைகளுக்குப் பாதி விலை. பிரபுக்களுக்கு விலை வேறு.

அநேக நற்சாட்சிகளில் சிலவற்றைமட்டும் இங்கே குறிப்பிடுகிறோம்.

1. அநேக இடங்களிலும், பெங்கால் பெரிய பார்மஸியிலும் உள்ள எல்லா மருந்துகளைச் சாப்பிட்டும் தீராத செங்குஷ்டம், கால் ரணம் தங்கள் குரு தாம்ரபஸ்பம்சாப்பிட்டதால் குணமாயிருக்கிறது. S. இராமசாமி ஐயர், கருந்தட்டாங்குடி, தஞ்சாவூர். 19 10-25.

2. எனக்கிருந்த 3 துவாரமுள்ள ஆசனபவுத்திரம் குணமாயிற்று. பெரிய வியாதிகள் சீக்கிரம் குணமாகும் அபாரசக்தி தங்கள் குருதாம்ரபஸ்பத்தினிடம் இருக்கிறது. அதன் பெருமை எழுத முடியாது. உலகப்பிரசித்திபெற்ற நேசிகா, உமது திருவடிக்கு அநேக நமஸ்காரம்.

திரேகமெல்லாமிருந்த மேகப்பத்துகள் இருந்த இடந் தெரியாமல் மறைந்துவிட்டன. கைகால் விரல்களிலிருந்த ஆறாத மேகரணங்கள் பூரா ஆறிவிட்டன. முகவசீகரமும் பசியும் உண்டாயிருக்கின்றன. K. பழனியாண்டிப்பிள்ளை, செருத்தூர், லால்குடி, திருச்சி.

1-ம் நம்பர் ரசமணி.

இது வீரியவிர்த்திக்கு ஸ்பெஷல் ரசமணி அசல் ரசத்தாற் கட்டப்பட்டது. காய்ச்சிய பசும்பாலில் போட்டு பாலைமட்டும் சாப்பிட அபார வீரியபுஷ்டியும் கட்டும்; தேகபலமும் உண்டாகும். மற்ற நேரங்களில் இடுப்பில் அணிந்துகொள்ளச் சகல வசியமாகும். பற்பல ஜெயகாரியங்களைக் கொடுத்துக்கொண்டேயிருக்கும். எதிரிகள் பூனைபோற் பணிவார்கள். திரண்ட செல்வமும் மிகுந்த லாபமும் உண்டாகும். ரசமணி முடிப்பதுசாமான்யமானதல்ல. சித்தர்களாலேயே முடிக்கக்கூடியது. நமது குரு பெரிய மகான் அவர்களின் உபதேசத்தாலும், முருகர் பராசக்தி இவர்களின் அனுக்கிரகத்தாலும் முடிவடைந்தது. அரும்பாடும் பெரும்பொருளும் செலவுசெய்து முடிக்கப்பட்டது. பெரிய மணி 1-க்கு ரூபா 100; சிறியது ரூபா 50. மணிக்குரிய ஜெபம் லக்ஷம் உருச செபித்து முடித்தது ரூபா 150. ஏழைகளுக்குப் பாதி விலை. பிரபுக்களுக்கு நேற் வேறு.

2-ம் நம்பர் ரசமணி.

இது இடுப்பில்மட்டும் கட்டிக்கொள்ளக்கூடியது. மேற்சொல்லியகுணங்களுள்ளது. பெரிய மணி 1-க்கு ரூபா 10; சிறியது ரூபா 5. வீ. பி. சார்ஜ் வேறு.

சித்த ஆயுர்வேத டாக்டர்,
C. மலையப்பசாமி,
நித்தியானந்த மெடிக்கல்ஹால்,
பழனி, S. I.

(Q. 71. A.)

அந்தஉபத்திரவத்தை
என்பொறுத்துக்கொள்ள?

வாதரோகத்தினால் உங்கள் வாழ்வு
பயங்கரமும் பாரமுமாயிருந்தால் அதை
லிட்டில்ஸ் ஓரியன்றல் பாம்
தைலத்தினால் மாற்றிக்கொள்ளலாம்.
அது மிருதுவாய் நோவை யகற்றிடும்.
இன்றே ஒரு புட்டி வாங்கிக்கொள்ளுங்கள்

(2 26)



(Y 51 B.)

இந்துசாதனம்.

யாழ்ப்பாணம் அக்ஷய௵
வைகாசி௴ ௧௰௮ திங்கட்கிழமை.

தேசசரித்திர ஆதாரமுண்டா?—ந.

இந்துசீனத்திலும் மலாய ஆக்கிப்பலக் கோவிலும் சைவசமயத்தையும் கல்வியையும் விருத்தி செய்தவர்கள் பிராமணர்களாவர். ஸ்ரீ K. சுப்பிரமணிய ஐயரவர்கள் இந்து என்னும் பத்திரிகையில் இந்த விஷயமாகப் பல வியாசங்கள் எழுதியுள்ளார்; அவற்றில் மேலே சொல்லப்பட்ட தேசங்களிலே பூர்வகாலத்தில் பிராமணர்களும் சிற்பிகளும் ஸ்தபதிகளும் வசித்தார்கள் என்று தக்க ஆதாரங்களோடு காட்டியிருக்கின்றனர். வாவேறயின் என்னுஞ் சீன தேச சஞ்சாரி யவனதேசத்திற்கு ஏறிச் சென்ற கப்பலில் பிராமணர்கள் பலர் பிரயாணிகளாகச் சென்றனர் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. போர்னியோவிலே பிராமணர்கள் யாகாதி கருமங்கள் நடத்தியதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. சுமாத்திராவிலே பிராமணர் வசித்தனரேனப் பழைய சிலாசாசனங்கள் காட்டுகின்றன. பிராமணர் கடல் கடக்கவொண்ணுதென்ற பிரமாணம் அக்காலத்தில் இருந்ததேனின் இப்பிராணர்கள் மேலே சொல்லப்பட்ட தேசங்களிற் சஞ்சரித்தமை எங்ஙனம்? அப்படியோரு பிரமாணம் அக்காலத்தில் இருந்ததென்பதற்குச் சரித்திர ஆதாரமுமில்லையாம்; சோழமண்டலத்துள்ள துறைமுகங்களிலிருந்து நாவாய்கள் (கப்பல்கள்) பல தேசங்கட்கும் சோழமன்னர் காலத்திற் சென்றனவென்பதற்குச் சரித்திரஆதாரமுண்டு. கடல் கடக்கவொண்ணுதென்ற விதி பிற்காலத்தில் அதாவது விஜயநகரத்து அரசாங்கங் குன்ற சோனகரும் பறங்கியரும் கப்பல்களை வைத்து ஓட்டிய காலத்திலேயே விதிக்கப்பட்டிருத்தல்வேண்டுமேன அநுமானிக்கின்றேம்.

இந்தியாவில் நேர்ந்த அரசியல் மாற்றங் காரணமாகவே மலாய ஆக்கிப்பலக்கோ முதலிய தீவுகளிற் சைவசமயம் பரவியதெனப் பாதுகாவலன் ஆங்கிலப்பிரதி சாதிக்க முயல்வது நவீனமாகும். கலிங்க தேசத்திற்கும் யவனத்திற்கும் யாதும்தொடர்பிருக்கவில்லையென்பதை முன்னர்க்காட்டியுள்ளோம். ஒன்பதாம் நூற்றுண்டிலே கலிங்கத்திற்கும் சுமாத்திராவிற்கும் தொடர்பிருந்ததாகத் தெரிகின்றது. சிறீபோஜராசர் பரம்பரை கலிங்கத்தைச்சேர்ந்ததாகும் 'சைவசமயாசாரியர் காலத்திலே சைவம் விருத்தியடைந்தன்மையை பௌத்தம் அசோக அரசன்காலத்தில் விருத்தியடைந்த தன்மைக்கு ஒப்பிடலாகும்" என்று சங்குலிகூறுகின்றுர். பௌத்த மதத்தை இந்தியாவிலும் மற்றுந்தேசங்களிலும் போதிப்பதற்குப் பௌத்தசமய போதகர் இருந்தமைபோல, சைவத்தை இந்தியாவிலும் மற்றுந்தேசங்களிலும் போதிப்பதற்குச் சைவசமயாசாரியர்கள் விளங்கினர். தென்னிந்திய தேச சரித்திரத்தைப் படிப்பார்க்குத் தென்னிந்தியா ஒருகாலத்திற் சமாதானத்தோடு விளங்கிய தென்பது இனிது புலனுகும். கிறீஸ்துவுக்குப்பின் 77-ம் ஆண்டில் திரியஸ்தர் என்னும் பிராமணர் யவனதேசத்தில் இந்திய சாஸ்திரங்களையும் சைவசமயத்தையும் போதித்தனர். இவைகளையெல்லாம் நோக்குமிடத்து, சைவசமயம் அந்நியதேசங்களிலும் பரவியதற்குக் காரணம் சைவசமயாசாரியர்களுடைய போதனையாகுமேன்பதும் அரசியல் மாறுதலல்லவேன்பதும் இனிது விளங்கும். தேசசரித்திரங்களை நன்கு ஆராய்ச்சி செய்வதைவிடுத்து வாயில் வந்தனவற்றையெல்லாஞ் சொல்வதும் மனம் போனவாறே எழுதுவதும் பொருந்தாவாம்.

[மூன்றுபாகமாகத் தொடர்பாய் இப்பத்திரிகையில் வெளியிடப்பட்டுவந்த இவ்வியாசம் சென்ற௴ ௧௰௨ ஆங்கில இந்துசாதனத்திற் பத்திராசிரியர் கூற்றுக வெளிவந்த நீண்ட வியாசத்தின் மொழிபெயர்ப்பாகும்]

முன்னை ஊழ்வலி.

பூர்வசென்மத்திற் செய்துள்ள நல்வினை தீவினைகளை இச்சென்மத்தில் அனுபவித்தல்வேண்டும். அவற்றை அனுபவித்தற்கேற்ற ஒரு சரீரமே இச்சென்மத்திற் கிடைக்கும். ஆகவே இத்தேகம் நன்மை தீமையென்னும் இருவினையாகிய கயிற்றிலே தொங்கிக்கொண்டிருக்கிறது. அவ்வினைகளை அனுபவித்துமுடிந்தபின் சிறிது நேரந்தானும் உயிரானது தானென்று அபிமானித்திருந்த உடம்பிற்றங்கியிராது. "வினைப்போகமே ஒருதேகம் கண்டாய், வினைதானொழிந்தாற் றினைப்போதளவுநில்லாது" என்னும் பட்டினத்தடிகள் வாக்கியம் இதனை நன்குவலியுறுத்தும். பூர்வ உணர்ச்சி சிறிதுமில்லாமையினுலே நாம ஒரு நல்வினையை அனுபவிக்குமிடத்து மகிழ்ச்சியும், தீவினையை அனுபவிக்குமிடத்துத் துயரமும் அடைகின்றேம். முன்னைவினையை உணரும் ஆற்றலுடையோர் மகிழ்ச்சியுமடையார், துயரமுமுறுர். இதனைவிளக்கும் ஓர் சரிதமாவது:

கங்கை யென்னும் ஓர் தேவப்பெண் பிரமனுடைய சபையிற் சென்று பிரமதேவரை வணங்கும்போது அவளது வஸ்திரம் சிறிதே நெகிழ்ந்தது. அங்கிருந்த வருணன் அவள்மீது நாட்டம் வைத்தான். இதனை அறிந்த பிரமன் வருணனை நோக்கி "நீ பூமியிற்பிறந்து இவளை மணந்துமீளுதி" எனச் சபித்து, அப்பெண்ணையும் பூமியிற் சென்று வருணனின் உள்ளக்கருத்தை நிறைவேற்றுதி என்றனன். வருணன் சந்திரகுலத்திலே பிறந்து சந்தனு வென்னும் பேர்பெற்று அரசபுரியும் நாளில் ஒருதினம் காட்டில் வேட்டையாடிக் களைப்புற்றுக் கங்கைக்கரையை நாடிச் சென்றுன். முன்னை யுணர்வுடன் பூமியிற்றேன்றிய கங்கையென்பாள் அரசன்முன் தென்படுதலும், அவன் தன்னை விவாகஞ்செய்யும்பொருட்டு இரந்து நின்றுன். கங்கை அதற்கு இசைந்தாள் போன்று ஒருபால் ஒதுங்கி நாணி வாய்புதைத்துத் தரையைக் காலாற்கிறி "எவ்வித அக்கிரமத்தை நான் புரிந்தபோதும் நீர் பொறுத்துக் கொள்வீராயின் இசைவேன்; இது எனது விரதமாகும்" என்றுள். கங்கையின் வனப்பினுற் கவரப்பட்ட மன்னன் அதற்கிசைந்து முறைப்படி விவாகஞ் செய்தான். பன்னுட்கழிதலும் அப்பெண் ஓர் ஆண்மகவை ஈன்று, அதனை உடனே ஆற்றுட் புதைத்துக் கொன்றுள். அரசன் தன்மனைவியின் அடாதசெயலைக் கண்டும், அவளுக்குக் கூறிய வாக்கைக் காப்பாற்றும் பொருட்டு ஆறுத்துயருடன் யாதும் பேசாதிருந்தான். அப்பெண் பின்னரும் ஆறு புத்திரரைப் பெற்று முன்போல ஆற்றுட் புதைத்துக் கொன்றனள்.

இந்த அக்கிரமத்தைக் கண்ட நகரவாசிகள் நடுக்கமுற்றுர்கள். சிலர் சந்திரகுலமானது இவளால் வடுவுற்றது என்றுர்கள். சிலர் ஆறுபோற் கண்ணீர் உகுத்தார்கள். இராச சபையும் அரசியின் செயலையிட்டு அரசனை வெறுத்தது. கங்கையென்பாள் எட்டாம்முறை கருப்பவதியானுள். அப்புத்திரன் பிறக்கும்போது அரசன் மந்திரிமாருடையோசனைப்படி பிரசவவீட்டினுட் புகுந்து குழந்தையை அரசியின் கையில் அகப்படாவண்ணம் தூக்கியெடுத்துப் "பெண்ணே, உனக்குக் கூறிய வாக்கை நான் மீறினேனென நீ வெகுளேல்; சந்திரகுலம் விளங்கவேண்டி இக்குழந்தையைக் கொல்லாதொழிகுதி. என்னை விடுத்துச் சென்றுலுஞ்செல்லுதி; இப்பிள்ளையே எனக்கு வேண்டும் உனது செயல்களைப்பற்றி எனக்கு யாதும் விளங்கவில்லை. பெண்ணே! இப்படியான அக்கிரமத்தை மங்கையர்திலகமாம் உன்போல்வார் செய்தல் நீதியாகுமா" என்றுன். பூர்வஜென்ம உணர்ச்சியுள்ள அப்பெண் அரசனைப் பார்த்துப் பிரமதேவருடைய சபையில் நிகழ்ந்த விஷயங்களை விரித்துக் கூறியபின் "அரசே! சத்தியலோகத்திலிருந்து பூமியை நோக்கி வரும்வழியில் நான் அட்டவசுக்களைச் சந்தித்தேன். அவர்களுள் ஒருவன் தன் மனையாளுடைய ஏவலினுல் மற்றைய எழுவரையும் துணையாகக் கொண்டு வசிட்டமுனிவருடைய ஆச்சிரமத்துள்ள காமதேனுவைக் கவர்ந்து சென்றுன். இதனை உணர்ந்த முனிவர் பெண்ணின் ஏவலால் இக்களவைப் புரிந்தவன் பூமியிற் பிறந்து பல்லாண்டு பிரமசாரியாக வாழ்ந்தபின் தன் பதவியைப் பெறக்கடவன்; அவனுக்குத் துணைப்புரிந்த எழுவரும் பூமியிற் பிறந்தவுடன் மீளக்கடவர் எனச் சபித்தனர். அந்த எண்மரும் தங்களுடைய வேண்டுகோட்படி என்வயிற் றுதித்தனர். ஆகவே நான் முன்னே பெற்ற எழுவரையும் பிறந்த அவ்வப்போதே கொன்றேன். எட்டாவதாகப் பிறந்து உமது கைகளில் ஏந்தப்பட்டிருக்கும் இக்குழந்தையை நான் ஒருபோதும் கொல்லமாட்டேன் என்றனள்.

கங்கை தான் முன்னரே பெற்ற எழு பிள்ளைகளை நீருட் புதைத்துக் கொன்றபோது அரசன் மௌனமாயிருந்தமையும், எட்டாவது பிள்ளையைத் தாயின்கைப்படாவண்ணம் மன்னவன் காப்பாற்றியமையும் முன்னை ஊழ்வினைபற்றி நிகழ்ந்தனவாம். "உள்ளியர் தெள்ளியராயினும் ஊழ்வினை, மெல்ல நுழைந்துவிடும்" என்பது வள்ளுவநாயனுர் வாக்கியம். அரசன் கங்கைக்குக் கூறியுள்ள உறுதிவாக்கியமானது எழுவரும் பூமியிற் பிறந்து உடனே இறத்தலாகிய முன்னை வினைக்கு இன்றியமையாத் துணைப்புரிந்து கருமத்தைநிறைவேற்றியது. அவளது உறுதிவாக்கியம் மீறப்பட்டமை எட்டாவதுபிள்ளை முன்னை வினைப்படி உயிருடன் இருக்கவேண்டுமென்னும் பிராரத்துவத்துக்கும் இன்றியமையாத் துணையாயிருந்தது. ஆகவே அரசன் உறுதிமொழியைக் காப்பாற்றிய போதும் மீறியபோதும் முன்னைவினையே நிகழ்ந்ததாம். அரசனுற்காப்பாற்றப்பட்டதும் மீறப்பட்டதும் சத்தியமேயாம் காப்பாற்றப்பட்டகாலத்தும் மீறப்பட்டகாலத்தும் முன்னை ஊழ்வினையானது சிறிதும் மாற்றமின்றி உள்ளபடி நடைபெற்றது.

கங்கை யென்பவள் தான் பூர்வஜென்மப் பெருமையையும் ஈண்டுப் பூவுலகுக்கு வரவேண்டியிருந்த காரணத்தையும் நன்கு அறிந்தவளாதலினுல் வாழ்வில் மகிழ்ச்சியும் தாழ்வில் தளர்ச்சியும் எய்தினுளல்லள். இதுவும் ஓர் கடனென நினைத்துத் தன் கருமத்தை நிறைவேற்றி முன்னருள்ளதாகிய பதவியை அடைய விரும்பினுள். பூர்வஜென்ம உணர்ச்சியில்லாத அரசன் குடும்பச்சேற்றில் அமிழ்ந்திப் பேரிடருறலானுன். அவள் அரசனுக்கும் தனக்குமுள்ள தொடர்பை நீக்கியவுடன் எட்டாவதாகிய பிள்ளையைக் காப்பாற்றும் பொருட்டுச் சிலகாலம் வேறிடத்திற் றங்கினுள். பிள்ளைக்குப் பதினுறுவது வயது வருதலும் சிறுவனை அரசன்பால் நிறுத்தி "இவன்பெயர் தேவவிரதன்; இவனுற் சந்திரகுலம் நன்மையடையும்; இவனுடன் உலகை ஆளுதிர்" எனக்கூறி விண்ணுலகெய்தித் தனது பதவியை அடைந்தாள். "ஊழிற் பெருவலி யாவுள மற்றென்று, சூழினுந் தான் முந்துறும்" என்பதனுலும் ஊழ் வலிதென்பது பெறப்படுகின்றது.

(வரும்)

மஹாசங்காபிஷேகமும் கருப்பூர தீபோற்சவமும்.

இந்தமாதம் ௨௩-ம் திகதி (5-6-26) சனிக்கிழமை பகல் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலிலே மஹா சங்காபிஷேகமும் இரவு கருப்பூர தீபோற்சவமும் மிகவும் சிறப்பாக நடைபெறும்.

தேசாதிபதியவர்களை உபசரித்தல்.

வருகிற ஜூன்மாதம் 10-ம் திகதி வியாழக்கிழமை பத்தரை மணிவரையில் தேசாதிபதியவர்கள் யாழ்ப்பாணத் திலிருந்து சாவகச்சேரிக்குப் போகும் மார்க்கத்திலே நாவற்குளிப் புகைரத ஸ்தானத்துக்குப் பக்கத்தில் அமைக்கப்பட்டிருக்கும் பந்தரிற் சிறிதுவேளை தங்குவார். அப்பொழுது அக்கிராமத்திலும் அயற் கிராமங்களிலுமுள்ளாரால் தேசாதிபதி அவர்களுக்கு ஓர் உபசாரணைப் பத்திரம் வாசிக்கப்படுமெனப் பிரமஸ்ரீ. இ. குருசுவாமிக் குருக்களவர்கள் தெரிவிக்கிறுர்.

மோட்டர் வண்டி விபத்து.

சென்றவியாழக்கிழமை, யாழ்ப்பாணத் திருந்து மானிப்பாய்க்குப்போகும் தெருவிலே ஒரு வண்டி மற்றொரு வண்டியை முற்பட்டுச்செல்லவேண்டி விரைந்து ஓடியபோது அவ்வழிச் சென்ற பெண்கள் இருவரை இடறி அப்பாற் சென்று பின்னரும் ஓர் பெண்ணைத் தாக்கியது. பெண்கள் உடனே வைத்தியசாலைக்குக்கொண்டு போகப்பட்டார்கள். ஆபத்தான நிலைமையிற்கிடக்கும் ஓர் பெண்ணிடம் யாழ்ப்பாணம் பொலிஸ்நீதிபதி மரணவாக்குமூலங் கேட்டனர். சாரதிகள் இருவர்மீதும் பொலீசரால்வழக்குத்தொடரப்பட்டிருக்கிறது

பாலர் ஞானோதய சங்கம்.

சென்ற மூன்று வருடகாலமாக மயிலிட்டி தெற்கிலுள்ள சைவமடத்திலே நடைபெற்றுவந்த இச்சங்கம் இப்பொழுது தனக்கென ஓர் மண்டபம் அமைத்திருக்கிறது. இப்புதிய மண்டபப் பிரவேசம் இத்த௴ ௨௰௩ (5-6-26) சனிக்கிழமை காலை 5 மணி 52 நிமிஷத்தில் வரும் இடபலக்கின சுபமுகூர்த்தத்தில் நடைபெறும் குறித்த சங்கத்தின் மூன்றுவது வருடாந்தக் கூட்டம் அன்று தொடக்கம் அடுத்த நான்கு தினங்களிலும் புதிதா யமைக்கப்பட்ட மண்டபத்திலே நிகழும். அங்குள்ள சைவ வாலிபரின் சற்கருமத்தையிட்டு நாம் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேம்.

தியாலக்கொடையைக் கடல் அரிக்கின்றது.

தென்மாகாணத்திலே தியாலக்கொடை என்னுமிடத்துள்ள கரையைச் சிறிது சிறிதாக கடற்றிரைகள் அரிக்கின்றன. அநேக தென்னமரங்கள் பாறி வீழ்ந்தன. கரையிலுள்ள சிறுகடைகளும்வாரிக்கொண்டு போகப்படும் போலத்தெரிகிறது. சிலகடைகளின் சுவர்கள் விழ்ந்தன. திரைகளின் வேகம் வரவர அதிகரிக்கிறது. அந்தஇடம் முழுவதும் கடலாகிவிடும் போலத் தெரிகிறது.

பெட்டிக்குட் பிரேதம்.

காலிப்புகைரத ஸ்தானத்தில் ஓர் புகைரதத் தொடர் தங்கியபோது உரிமையுடையாரின்றிக் காணப்பட்டபெட்டி ஒன்றினுள் ஒரு சிறுமியின் பிரேதம் வைத்துப் பூட்டப்பட்டிருந்த சமாசாரத்தைச் சென்ற வாரம் வெளியிட்டுள்ளேம். கொழும்பிலே அரசினர் பாற்சாலையிற் கருமம்பார்க்கும் ஒருவர் சந்தேகத்தின் மீதுபிடிக்கப் பட்டிருக்கிறுர் அவரின் சகோதரனுகிய செய்டிறிஸ் அப்பு என்னும் ஒருவரும் சென்ற வெள்ளிக்கிழமை பிடிக்கப்பட்டார். ஜேன்என்னும் சிறுமியின் பிரேதம் வைக்கப்பட்ட பெட்டியை குறித்த செய்டிறிஸ் அப்புஎன்பவர் கொழும்பிலிருந்து புகைரதமார்க்கமாகக் கொண்டு சென்றதாக இரகசியப் பொலீசர் ஆராய்ந்து அறிந்தனர். அவர்கள் சிறுமியின்பெற்றுர் இன்னரென்பதையும் ஒருவாறு அறிந்துவிட்டார்கள். குற்றம் சாட்டப்பட்ட இருவரும் விளக்கமறியலில் இருக்கின்றுர்கள். விசாரணைவருகிற புதன்கிழமை நடைபெறும்.

முந்நூறுவீடுகள் எரிந்தன.

இந்தூரிலே ஒருவர் வேண்டுமென்று ஒரு வீட்டில் தீ மூட்டியமை காரணமாக அங்குள்ள முந்நூறு வீடுகள் எரிந்தன. இதனுல் நேர்ந்த நஷ்டம் இருபதுலட்சம்ரூபாவாம்.

பூனுவில் தீவிபத்து.

ஒரு பத்திரிகாலயம் எரிந்துவிட்டது.

ஏறக்குறைய நூறு வருடகாலமாகப் பூனுவிலே இந்திய ஊழியச்சங்கத்தாரால் நடாத்தப்பட்டுவந்த "தியானப்பிரகாச்" என்னும் பத்திரிகாலயம் சென்ற செவ்வாய்க் கிழமை, காத்திராவண்ணம் உண்டான நெருப்பினுல் எரிந்து சாம்பராயது. தீயவிக்கும் யந்திரங்கள்பலசென்று தம்மாலானமட்டும் முயன்றும் நெருப்பைத் தணிக்க முடியவில்லை. லட்சக்கணக்கான ரூபாய் நட்டமெனச் சொல்லப்படுகிறது.

ஒரு பெண்ணின் வீரச்செயல்.

கல்கத்தாவுக்குச் சமீபமாயுள்ள ராஜ்பாரி என்னும் கிராமத்திலே இருபத்துநான்குபேர் கொண்ட ஒரு கொள்ளைக் கூட்டம் ஒருவீட்டினுட்புகுந்து கொள்ளையிட்டது. அவ்வீட்டில் தனியே யிருந்த ஒரு விதவை தன் கையில் ஓர் பெரிய வெட்டுக்கத்தியை ஏந்தி அவர்களை எதிர்த்துச் சருவினள். எல்லோரும் ஒருங்கு சேர்ந்து அப்பெண்ணை அடித்துக் காயப்படுத்தினர். அரவங்கேட்டுச் சென்றேர் அப்பெண்ணுக்குத் துணைப்புரிவதற்கு அஞ்சி ஒதுங்கினின்றுர்கள். பெண் வைத்தியசாலையிலே ஆபத்தானநிலையிற் கிடக்கின்றனள்.

பொலிஸ் சுப்பிறின்ரென்டன் கொலைசெய்யப்பட்டமை.

வங்காள இரகசியப் பொலிஸ் பகுதியில் விசேட சுப்பிறின்ரென்டனுகிய ராவ்பகதூர் பூபேந்திரநாத் சட்டர்ஜி என்பவர் சென்ற வெள்ளிக்கிழமை அலிப்பூர்ச் சிறைச்சாலைக்குச் சென்று, தட்சணேஸ்வர வெடிக்குண்டு வழக்கிற் சம்பந்தப்பட்ட கைதிகளுடன் பேசிக்கொண்டிருந்தபோது குறித்த சிறையாளர்களுள் ஒருவன் காத்திராப்பிரகாரம் அவரைப் படுகாயமுறக் குற்றினுன். அவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டு போகப்பட்டுச் சிறிதுவேளையில் இறந்தனர். குறித்த வெடிக்குண்டு வழக்கிற் சம்பந்தப் பட்டவர்களைப் பிடிப்பதற்காக விசேட முறைகளைக் கையாண்டு உண்மைகளை வெளிப் படுத்தி எதிரிகளைப் பிடித்தமையே இக் கொலைக்குக் காரணமாகும்.

தேகவியோகம்

வண்ணூர்பண்ணை மேற்கை ஜெநரல் தானமாகவுள்ளவரும் யாழ்ப்பாணம் பிஸ்காப்புக் கந்தோர்த் தலைமை லிகிதருமாகிய ஸ்ரீ ச. சுவாமிநாதவர்கள் சிலநாட்களாகத் தம்மைப் பீடித்துள்ள நோய் காரணமாகச் சென்ற வியாழக்கிழமை இரவு வண்ணூர்பண்ணை மேற்கிலுள்ள தமது கிருகத்திலே தேகவியோகமாயினரென்னும் துக்க சமாசாரத்தை அறியலானேம். இவருக்கு இறக்கும்போது வயது 55. தகனக்கிரியைகள் அடுத்த நாளாகிய வெள்ளிக்கிழமை இவரது ஏகபுத்திரன் ஸ்ரீ பதஞ்சலி அவர்களாற் செய்யப்பட்டன.

இரணைமடுக் கொலைவழக்கு.

கண்டியில் விசாரணை தொடங்கிவிட்டது.

சென்ற திங்கட்கிழமை (24—5—26) இரணைமடுக் கொலைவழக்கு கண்டிச் சுப்பிறீங்கோட்டில் விளக்கத்திற்கு எடுக்கப்பட்டது. 'லியால் கிருன்ற்'' அவர்களே நீதியரசராகவிருந்து இவ்வழக்கை விசாரணை செய்கின்றார். மிஸ்ரர் தோம்சனை முதலாகவுடைய ஐரோப்பியரே யூரிமார் எனப்படும் நீதி சொல்வோராகவிருக்கின்றனர். எதிரிகள் 8 பேர். முடிக்குரிய நியாயவாதி மிஸ்ரர் J. E. M. உபயசேகரா ஆவர். மிஸ்ரர் துரைசுவாமி தம்பு மிஸ்ரர் C. R. தம்பையா என்னுமிவர்களே முதல் ஏழு எதிரிகள்பொருட்டு நியாயம் வாதிப்பவராவர். எட்டாம் எதிரியின் நியாயவாதி மிஸ்ரர் V. ஜோசேவ்.

(முன் தொடர்ச்சி.)

T. E. நாகராசாவின் சாட்சியம்: இறந்த சேனாதிராசா எனக்குத் தூரந்த இனத்தவர்; என்னோடு மிகவுஞ் சிநேகமானவர்; சித்திராபூரணைக்கு இரண்டு நாட்களுக்கு முந்தி (மேமீ 6உ) மோட்டாரத மூலமாக நாங்கள் வேலக்கைப் பிள்ளையார் கோயிலுக்குப் போயிருந்தோம்; வேலுப்பிள்ளை யென்பவர்தான் ரதத்தின் சாரதி; கோயிலிலே தாசியர் நடனம் நடைபெற்றது; நான் இன்னொரு சிநேகிதனுடன் பேசும்படி அவ்விடத்தைவிட்டு எழுந்தேன்; சன நெருக்கம் அதிகமாகவிருந்தது; சேனாதிராசாவும் நடராசாவுங் கோயிலினின்றும் இடையிற் புறப்பட்டு வெளிப்பக்கத்திற்குப் போனார்கள்; நானும் அவர்களைத் தொடர்ந்து சென்றேன்; வெளியே வந்தபின் சேனாதிராசா அங்கே நடந்த அடிபிடியைப்பற்றி எங்களுக்குச் சொன்னார். பொன்னம்பலமென்பவரும் வெளியேவந்தார்; சேனாதிராசா பொன்னம்பலத்தை அடிக்க பொன்னம்பலமுந் திரும்பிச் சேனாதிராசாவிற்கு அடித்தார்; நான் இடையிற் சென்று விலக்குப்பிடித்தேன்; அதன் பின் நானும் நடராசாவும் சேனாதிராசாவும் கட்டுடை அம்மன் கோயிலுக்குப் புறப்பட்டுப் போனோம். பின்பு நடுச்சாமத்தில் அங்கிருந்து மீண்டு வேலக்கைப் பிள்ளையார் கோவிலுக்கு வந்தோம்; பொன்னம்பலமும் 3ம் எதிரியும் நாங்கள் ஏறிவந்த ரதத்திற்குக் கல்லாலெறிந்தார்கள்; ஒரு மணித்தியாலம் அங்கே நின்றுவிட்டு வண்ணார்பண்ணையிலுள்ள இராசா அருளம்பலம் வீட்டிற்கு வந்தோம். கட்டுடையிலிருந்து வரும்போது வேலாயுதபிள்ளை யென்பவர் வேலக்கைக்குப் போகவேண்டாமென்று எங்களுக்குப் புத்தி சொன்னார். மேமீ 7உ இரவு மாலைக்காலத்தில் நானும் சேனாதிராசாவும் மோட்டாரதத்தில் ஏறிக்கொண்டு நல்லூர் முச்சந்திக்குப் போனோம். அங்கே சேனாதிராசா 5ம் எதிரியைச் சந்தித்து, ரதத்திலிருந்து இறங்கி ஏதோ பேசினார்; சுப்பிரமணியர் பண்டாரக் குளத்துத் தெருவழியே சென்று, முத்துவோடும் இன்னொருவரோடுஞ் சிறிது செல்ல மீண்டுவந்தார். எல்லாரும் அந்த ரதத்தில் ஏறிக்கொண்டு அந்நகரத்தான் நாற்சந்திக்கு வந்தோம்; பின்னர் நானும் சேனாதிராசாவும் வேறொரு ரதத்தில் ஏறிக்கொண்டு ராசா அருளம்பலம் வீட்டிற்கு வந்தோம்; மற்றெல்லாரும் முந்திய ரத மூலமாக வேலக்கைப் பிள்ளையார் கோயிலுக்குப் போய்விட்டனர்; சேனாதிராசா தாமுங் கோயிலுக்குப் போகவேண்டுமென்றும் மேலே சொல்லப்பட்டவர்கள் தமக்குத் துணையாக நிற்கவேண்டுமென்றுங் கூறினார்; நாங்களிருவரும் பின்னர் புறப்பட்டுக் கோயிலுக்குப் போனபோது பொன்னம்பலமும், 3ம் எதிரியும் வேறு சிலரும் கோயிலில் நிற்கக் கண்டோம்; இதற்கிடையில், சரவணமுத்து, சந்தையா, 3ம் எதிரி ஆகிய மூன்று பேரும் சேனாதிராசாவையும் பொன்னம்பலத்தையும் சமாதானஞ் செய்துவிட்டார்கள்; அதன் பின் நாங்களெல்லாரும் வீடுகளுக்கு மீண்டுவிட்டோம். அடுத்த நாள் நான் என்னுடைய மோட்டார் துவிச்சக்கர வண்டியில் சேனாதிராசாவை கிருஷ்ணபிள்ளை வீட்டிற்கு ஏற்றிக்கொண்டு சென்றேன்; சேனாதிராசா கிருஷ்ணபிள்ளையிடம் கொஞ்சக்காசு கடன் வாங்கினார்; அன்றுபின்னேரம் எங்கள் கூட்டாளியாகிய நடராசா இந்தியாவிற்குப் புறப்பட அவரைப் பயணமனுப்பும்படி யாழ்ப்பாண புகையிரத ஸ்தானத்திற்குப் போனோம்; அங்கிருந்து மீண்டு இருவரும் [illegible] சந்தியில் வந்தவுடனே ஒருவரையொருவர் பிரிந்துவிட்டோம்; அன்றுதான் நான் கடைசியாகச் சேனாதிராசாவைக் கண்டது மேமீ 10உ. சேனாதிராசாவைப்பற்றி ராசா அருளம்பலமவர்களின் கேள்விப்படி விசாரணை செய்தேன்; ஜூன்மீ இந்த விஷயமாகப் பொலிஸ் நீதிவான் முன்னிலையிற் சாட்சியஞ் சொல்லியிருக்கின்றேன்.

மிஸ்ரர் தம்புவின் குறுக்குக் கேள்வி.

—நீர் கோவிலுக்குப் போனது வணக்கத்திற்கு மாத்திரமல்ல, கண்காட்சிக்காகவும் போனேனென்று சொன்னீரே; கோயிலிலே என்ன கண்காட்சி?

—பாட்டுஞ் சங்கீதமுந்தான் அங்குள்ள கண்காட்சி;

—பாட்டுஞ் சங்கீதமுங் கண்காட்சி யாதுமா? தேவடியாளைப்பார்ப்பதுதான் கண்காட்சி; அப்படியல்லவா?

—(மறுமொழியில்லை)

—குறித்தகோயிலுக்கு உங்களைப்போகவேண்டாமெனச் சிலர் தடுத்தனரல்லவா?

—இல்லை.

—வேலாயுதபிள்ளை யென்பவர் தடுக்கவில்லையா?

—உங்களுடைய பகைவர் அங்கே சந்தியில் நிற்கிறார்களென்று மாத்திரம் வேலாயுதபிள்ளை சொன்னார்.

—ஆனால் நீங்கள் அந்தச் சந்திக்குப் போனீர்களல்லவா?—ஓம்.

—சேனாதிராசா தான் பகைவருக்குப் பயப்படவில்லை யென்பதைக் காட்டவிரும்பினாரல்லவா?

—என்றுதான் நினைக்கிறேன்;

சின்னத்தம்பி சரவணமுத்துவின் சாட்சியம்: நான் கோயிலுக்குப் போவது கும்பிடுவதற்காக; இவர்கள் சண்டையிட்ட தினத்தன்று நான் அங்கே நிற்கவில்லை; ஆனால் அடுத்த நாள் எல்லாம் சமாதானமாக்கியாய்விட்டன; சமாதானம் பண்ணியவர்கள் 3ம் எதிரி, சந்தையா, நான்; சேனாதிராசாவை மேமீ 8உ இரவு 8 மணிவரையில் நல்லூர்க்கந்தசுவாமி கோயிலுக்கணித்தாகக் கண்டேன்; அதுவே நான் அவரைக் கடைசியாகக் கண்டதாகும்.

குறுக்குக் கேள்விகள்

—கிருஷ்ணபிள்ளைக்கு வேலை தள்ளுப்பட்டதற்குக் காரணம் அவர் ஸேர். பொ. இராமநாதனவர்களைப் பரிகாசஞ் செய்தார் என்னுங் குற்றத்தின் பேரிலல்லவா?

—ஏதோ சாராயந் தவறணைகளை நீக்கும் விஷயத்திலேதான் வேலை தள்ளுப்பட்டது; கள்ளுத்தவறணைகளையும் சாராயத் தவறணைகளையும் நீக்குதல் வேண்டுமென, ஸேர். இராமநாதனவர்களைச் சபைத் தலைவராகக்கொண்டு ஒரு கூட்டம் வைக்கப்பட்டது. சனங்கள் அவருக்கு மாலையிட்டு அவரை ஒரு கதிரையில் வைத்துச் சுமந்து சென்றார்கள்; முடிந்தபின்பு இந்த விதானை அந்தக் கதிரையில் ஏறியிருந்துகொண்டு, தன்னைச் சுமந்து செல்லும்படி சில குடிகாரருக்குச் சொன்னார்.

முடிக்குரிய நியாயவாதி: இதற்கும் வழக்குக்கும் என்ன சம்பந்தம். இது தகாத கேள்வியாகும்.

மிஸ்ரர் தம்பு: இது பிரதானமாக அறிந்து வைத்துக்கொள்ளவேண்டிய விஷயமாகும்.

மிஸ்ரர் ஜோசேப்பும் இச்சாட்சியைச் சில கேள்விகளை கேட்டார்.

அடுத்த சாட்சி சரவணமுத்து கார்த்திகேசு: இவர் சேனாதிராசாவை மேமீ 8உ இரவு தான் கண்டதாகச் சொன்னார். இவ்வளவில் அத்தினத்து விசாரணை முடிந்தது.

வியாழக்கிழமை விசாரணை.

விநாசித்தம்பி கணபதிப்பிள்ளையின் சாட்சியம்:-நான் நல்லூரில் பண்டாரக்குளத்திலிருந்து ½ மைல் தூரத்தில் வடக்கே வசிப்பவன்; நல்லூர்க்கந்தசுவாமிகோயில் எனக்குத் தெரியும். குறித்த தினத்தன்று இரவு 10 மணி வரையில் நான் கோயிலில் நின்றேன். பூசை முடிந்தபின் வீட்டிற்கு மீண்டேன்; கோயிலிலிருந்து வடக்குநோக்கிச்செல்லும் தெருவீதியினால் நான் போனேன்; அந்தமார்க்கமாகப் பண்டாரக்குளத்திற்கும் போதலாகும்; நான் போகும்போது யாரோ ஐயோ! ஐயோ, என்று அபயக்குரலோடு அழுஞ்சத்தம் என்காதிற்பட்டது. நான் சிறிது சமீபத்திற்போனேன்; ஒருவரை வேறு இருவர் போட்டு அடிப்பதைக் கண்டேன்; சேனாதிராசாவைத்தான் அடிக்கிறார்களெனக்கண்டேன்; (6-ம் 7-ம் எதிரிகளே சேனாதிராசாவை யடித்தவர்களென்று அவர்களிருவரையுஞ் சுட்டிக்காட்டினர்.) நான் நிலவுவெளிச்சத்தில் இவர்கள்தாம் என்பதைப் பார்க்கத்தக்கதாகவிருந்தது; இந்த இருவரையும் நான் முந்தியும் அறிவேன்; சேனாதிராசாவையும் முந்தியறிவேன்; அவரைத்தான் அடிக்கிறார்களென்பதை ஒலியின் சத்தத்தினாலும் உயரம்பருப்பத்தினாலும் அறிந்துகொண்டேன்.

மிஸ்ரர் தம்பு:- முடிக்குரிய நியாயவாதி இப்படிப்பட்ட கேள்விகள் கேட்கவொண்ணாது.

முடிக்குரியநியாயவாதி:-இப்படிக் கேட்காவிட்டால் சாட்சிகள்வாயிலாக உண்மையறிதல் முடியாது.

மிஸ்ரர் தம்பு: இதிலும்பார்க்கச் சங்கடமான கடமையை நான் செய்யவேண்டியவனாயிருக்கின்றேன்.

முடிக்குரியநியாயவாதி:-இதற்காகத்தானே உமக்குச்சம்பளந்தருகிறார்கள்.

விநாசித்தம்பி கணபதிப்பிள்ளை: நான் ஒழுங்கையாற் சிறிதுதூரம் அப்பாற்சென்றபோது ஒரு மோட்டாரதம் நிற்கக்கண்டேன்; எதிரிகள் ஒவ்வொருவரும் ஏதோ கருநிறமான தடிகளைக் கொண்டு அடிக்கக்கண்டேன்; வேறும்பலர் அந்த இடத்திற் கூட்டமாக நின்றார்கள்; அவர்கள் 6 பேரை நான் அறிவேன்; இவர்கள் அடித்தபின் மற்றவர்கள் சேனாதிராசாவைப் பிடித்து நெரித்தார்கள்; (1-ம் 2-ம் 3-ம் 5-ம் எதிரிகளே சேனாதிராசாவை நெரித்தவர்களென்று கணபதிப்பிள்ளை அவர்களைச் சுட்டிக்காட்டினர்) நான் பயந்து வீட்டிற்கு ஓடிவிட்டேன்; மோட்டார் வண்டியின் முன்புறத்தில் ஒரு ஆள்மாத்திரம் இருந்தது. வேறெவரையும் நான் ரதத்திற் காணவில்லை. சேனாதிராசாவின் பிரேதம் இரணைமடுக் காட்டிற் கிடக்கின்றதென்பதைப் பின்னர்க் கேள்விப்பட்டேன்; இதனைக் கேள்விப்பட்டவுடனே அன்று பண்டாரக் குளத்தில் நடந்த கருமத்தின் பயன் இதுதான் என்று நான் மதித்துக்கொண்டேன். எதிரிகள் பொல்லாதவர்களாதலால் நான் பயந்து இதனை யொருவருக்கும் வெளியிடவில்லை.

மிஸ்ரர் தம்புவின் குறுக்குக்கேள்வி.

—நீர் சாதியிற் கைக்கோளன்—ஓம்.

—முதன் முதல் நீர் சாட்சி சொன்னது சென்ற ஆக்கஸ்ட்மீ 28உ யல்லவா?

—நீர் சொல்லவேண்டிய தெல்லாம் முன்னே பொலிஸ் நீதவானுக்குச் சொல்லிவிட்டீர்?—ஆம்;

—அப்படிச் சொன்னபோது பழைய விதானை அந்த இடத்திற் நிற்கவில்லை யென்றுஞ் சொல்லியிருக்கின்றீரல்லவா? —ஓம்.

—அன்றிரவு சிலர் அந்தஇடத்தில் நின்றார்கள்; ஆனால் அவர்கள் இன்னின்னார் என்று அறிந்துகொள்ள உம்மால் முடியவில்லையல்லவா?—ஓம்.

—அப்படியிருக்கவும் பழைய விதானை அந்த இடத்திலில்லை யென்று முன்னே சொல்லியிருக்கிறீரல்லவா?

—ஆம் சொல்லியிருக்கிறேன்.

—அந்த விதானையும் உமது இனத்தவரா?

—ஆம் இனத்தவர்.

—அவர் கொஞ்சச் செல்வாக்குடையரல்லவா?

—எனக்கு அதைப்பற்றித் தெரியாது:

—அவர் ஒரு குத்தகைகாரன் என்பதுவும் உமக்குத் தெரியாதா?—தெரியாது.

—விதானை குத்தகைகாரன் என்பது உண்மையாக உமக்குத் தெரியாதா?

—விதானைமார் குத்தகை எடுக்கவொண்ணாதென்பது அரசினர் பிரமாணம்.

—விதானை இந்த வியாச்சியத்திற் சம்பந்தப்படவொண்ணாதென்பது உமது பிரியமல்லவா?—இல்லை.

—அன்றிரவு அந்தத்தெருவால் நீர் போவதற்கான விசேஷ கருமம் ஏதும் இருந்ததோ?—இல்லை.

—வீட்டிற்கு மீண்டுவருவதல்லாமல் வேறொன்றுமில்லை—வேறொன்றுமில்லை.

—பொலிஸ்கோட்டிலே, நீர் "மோட்டாரதம் அவசியம் வேண்டியிருந்தமையினால் ஒழுங்குசெய்வதற்காக அப்படிப்போனேன் என்று நீர் பொலிஸ் கோட்டிற் சொல்லியிருக்கின்றீரே"—(மறுமொழியில்லை)

—நீர் அப்படிச் சொன்னது மெய்தானே—ஓம்.

—நீர் அப்பொழுது சேனாதிராசாவின் முகத்தைக்கண்டிருக்கிறீர்?—இல்லை நான் அவருடைய முதுகுப்பக்கத்தைத்தான் கண்டேன்

—முந்திச் சேனாதிராசாவை உமக்குத் தெரியுமென்றும், அடித்தது சேனாதிராசாவைத்தானென்றும்சிறிது முன்னர்ச்சொன்னீரே?

—நான் சொன்னது என்னவென்றால், முந்திச் சேனாதிராசாவை எனக்குத் தெரியுமாதலால் அடிக்கப்பட்டது அவர்தானென்பதை அறிந்துகொண்டேன் என்பதே.

—நீர் முந்தி யொரு பையன்மீது ஏதோ குற்றஞ் சுமத்தி வழக்குத் தொடர்ந்தீர்?-இல்லை.

—நீ ஒரு சிறுவனைக்கொண்டு ஒரு மனுஷன் மீது வழக்கு வைப்பித்தாயல்லவா?—ஆம்.

—அந்தவழக்கில் அந்தப்பையனுக்கு அபராதம் விதிக்கப்பட்டதல்லவா?—இல்லை, அந்தமனுஷனுக்குத்தான் குற்றம் போடப்பட்டது.

—நீ ஒரு மனுஷியைக் கொண்டு ஒருமனுஷியின்மீது வழக்கு வைப்பித்தாயல்லவா?—இல்லை, அந்த மனுஷிக்குத்துணைச் செய்தேன்.

—அது ஒரு தாபரிப்பு வழக்கு; கோட்டார் அதனைத்தள்ளிவிட்டார்களல்லவா?—ஆம்.

—நீ ஒரு மனுஷியை அனுப்பினுயென்று அந்த மனுஷி உன்மீது வியாச்சியந்தொடா வில்லையா?—இல்லை.

—பிறக்டர் குமாரசூரியரை உனக்குத்தெரியுமா? —ஓம்

—அவர் அதிகஞ் செல்வாக்குடையவரல்லவா?

—அவர்கள் சாதிமாபிலுள்ளவர்கள்.

—ஆனால் அவர்கள் கைக்கோளரளவு செல்வாக்குடையவர்களல்ல?—அதைப்பற்றி எனக்குத்தெரியாது.

—அவர்களிடத்திற் பொருள்பண்டம் அதிகமுண்டா?

—அதைப்பற்றி அவர்களைத்தான்கேட்கவேண்டும்.

—எனக்குத் தெரியாதென்று சொல்வதல்லாமல் உப்படி மறுமொழி சொல்லக் கூடாது.

—இந்த இரண்டு எதிரிகளின் முகத்தையும் அந்தச சமையத்தில் நீர்கண்டேன் என்று தான் இப்பொழுதுஞ் சொல்லுகிறீர்?—ஆம், நான் கண்டேன்.

சுப்பி சொன்ன சாட்சியம்:- நான் சாதியிற் பள்ளி; நான் பண்டாரக்குளத்திற்கு அதிக சமீபத்திலே இருப்பவள்; இந்தச் செய்தி நடந்த தினம் எனக்கு நினைப்பாகவிருக்கின்றது; நான் அன்றிரவு என் கொட்டிலிற் படுத்திருக்கும்போது "ஐயோ! ஐயோ!" என்று யாரோ அபயக்குரலோடு கத்தினார்கள்; நான் மெல்ல எழுந்து படலையைத் திறந்துகொண்டு வெளியே போய் உற்றுக் கேட்டேன். குளம் என் வீட்டிற்கு எதிரிலேயுள்ளது. அந்த இடத்தில் நின்று பார்க்க ஒன்றும் புலப்படவில்லை. இன்னும் கிட்டப் போனேன்; கூட்டமாகச் சிலர் நிற்பதைக் கண்டேன்; இரண்டாம் எதிரியையும் அங்கே நிற்கக் கண்டேன்; அவரை முன்னரும் பலமுறை கண்டிருக்கின்றேன்; தெருவால் ஒரு 'கார்' போன சத்தமுங் கேட்டது. அடுத்தநாள் விடிய நான் போய் அந்த இடத்திற் பார்த்தபோது இரத்தஞ் சிந்தியிருக்கக்கண்டேன். அடுத்த . நான் இந்த இரண்டாம் எதிரி என் வீட்டிற்கு வந்து 'நானும் இராத்திரி அந்தக்கூட்டத்திலின்றேன் என்று நீயாருக்காயினும் சொன்னியேயோ, பிறகு உயிரோடு இருக்கமாட்டாய்'' என்று என்னை வெருட்டினார். அதற்குப் பயந்துதான் நான் ஒருவருக்கும் இதை வெளிபிடவில்லை; பிறகு தான் சேனாதிராசாவின் பிரேதம் காட்டிலே காணப்பட்டதென நான் கேள்விப்பட்டேன்; அதற்குப் பின்னும் பயந்து, நான் ஒருவருக்குஞ் சொல்லவில்லை; சிலநாட்செல்ல ஒரு பொலிஸ் என்னைப் பிடித்துக்கொண்டுபோய் பொலிஸ்தானத்தில் விட்டு இதைப்பற்றிக் கேட்டார். செப்டெம்பர்மீ 2உ பொலிஸ் பரிசோதகருக்கு நான் இதைப்பற்றிச் சொன்னேன்

மிஸ்ரர் தம்புவின் குறுக்குக் கேள்விகள்.

—உன் புருஷன் சாகமுந்தி உன்னை விட்டுப் பிரிந்துவிட்டானல்லவா?—ஓம்.

—நீ குடியிருக்கிற காணி கணவதிப்பிள்ளைக்குரியது?—ஓம்.

—கணவதிப்பிள்ளை கிருஷ்ணபிள்ளைக்கு இனத்தவரல்லவா?—ஓம்.

—விதானை கிருஷ்ணபிள்ளையைப் பிடித்து அடைத்தபிறகுதான் நீ இந்த விஷயத்தை வெளியிட்டது?—ஓம்.

—இரகசியப் பொலிசாகிய கிருஷ்ணன்தான் உன்னிடம் வந்து இவைகளைக்கேட்டவர்?—ஓம்.

—அதற்குமுந்தி உன்னைக்கேட்டபோது உனக்கு இதைப்பற்றி ஒன்றுந் தெரியாதென மறுத்துவிட்டாய்?—ஓம்.

—விதானையைப் பிடித்து அடைத்தபின் தான் இதைப்பற்றிச் சொன்னுய்?—இல்லை, எல்லாரையும் பிடித்துஅடைத்தபின்பே இதைப்பற்றி வெளியிட்டேன்.

—விதானையினுடைய மைத்துனன் இந்தஎதிரிகளுக்குமாருகச் சாட்சி சொல்லும்படி உன்னைக்கேட்கவில்லையா?—கேட்டவர்.

—பொலிஸ்கோட்டிலே "குறப்பண்ணின (கத்திரிக்கப்பட்ட) மயிருடைய ஒருவர் நின்றார் நான் முத்து என்று நினைத்தேன்'' என்று நீ சொல்லவில்லையா?—சொன்னேன்.

—முத்து எப்பொழுதும் தன்மயிரைக்கத்திரித்துக் கொள்பவரோ?—ஓம்.

—தலைமயிரைக் கத்திரித்தவர் ஒருவர் அங்கே நின்றமையினால் அவர் முத்துவாகத்தான் இருக்கவேண்டுமென்று நினைத்துக்கொண்டாய் போலும்?—இல்லை அவர் மற்றநாளும் என்வீட்டுக்குவந்து இதை ஒருவருக்குஞ் சொல்லாதே என்று சொன்னார்.

—ஆனால், அன்றிரவு அதுயாதென்பது உனக்குச்சரியாகத் தெரியாது?—இல்லை நல்லாய்த் தெரியும். நான் நிலவுவெளிச்சத்திற் கண்டேன்.

—முத்து இதைச் சொல்லவேண்டாமென்று உனக்குச் சொல்லமுந்தி இது இவ்வளவு பாரதூரமான காரியமென்று நீ நினைக்கவில்லை?—இல்லை.

—இடையிடையே வாலிபர்கள் இந்தப்பண்டாரக்குளத்திற்கு வந்து விளையாடுவது வழக்கமல்லவா?—வழக்கம்.

—இந்த வாலிபர்கள் அங்கேபோய்ப் பலவிதமாக விளையாடுகிறவர்கள்; ஒருவரோடொருவர் பெலன்பார்ப்பது:இப்படிப்பட்ட செயல்களைச் செய்வதில்லையா?—செய்வதுதான்.

—ஒவ்வொரு நாளும் அங்கே வந்து விளையாடுகிறவர்களா?—அதிகமாக வருவார்கள்.

—எப்பொழுதாயினும் சேனாதிராசாவையும், இந்த இடத்திற் கண்டிருக்கிறாயோ?—இல்லை, மற்றவர்களைக் கண்டிருக்கிறேன்.

—அன்றிரவும் இவர்கள் விளையாடுகின்றார்களென்றுதான் நீ நினைத்தாய் போலும்—ஓம்.

—அடுத்த நாட் காலை இரத்தஞ் சிந்தியதைக் கண்டபோது என்ன நினைத்தாய்? யாருடையமூக்கிலிருந்தாஞ் சிந்தியிருக்க வேண்டுமென்று நினைத்தேன். (வரும்.)

திரிகோணமலை மாதர்ஐக்கிய சங்கம்.

மேற்படி சங்கத்தின் கூட்டமொன்று நிகழும் அக்ஷயவருஷம் வைகாசிமீ 15உ சனிக்கிழமை சாயந்தரம் ஸ்ரீசண்முகவித்தியாலயத்தில் ஸ்ரீமதி அ. விசாலாட்சிப்பிள்ளையின் அக்கிராசனாதிபத்தியத்தின்கீழ்க்கூடிற்று. மேற்படிவித்தியாலயத்தின் தலைமையாசிரியையும் சங்கஅங்கத்தவர்களிலொருவருமாகிய ஸ்ரீமதி க. வள்ளியம்மாள் "மக்கள் உடம்பு" என்னும் பொருள்பற்றி ஓர் கட்டுரை வாசித்தனர். அதற்கு ஸ்ரீமதி. செ. வடிவாம்பாள் ஸ்ரீமதி. வே. பரமபாக்கியம் ஸ்ரீமதி வ. புவனேஸ்வரி ஸ்ரீமதி நா. நீலாயதாட்சி ஸ்ரீமதி கு. தெய்வநாயகி ஸ்ரீமதி தா. பொன்னம்மாள் முதலியோரால் குறிப்புரைகள் கூறப்பெற்று ஈற்றில் தேவாரபாராயணத்தோடும் அக்கிராசனாரின் முடிவுரையோடும் கூட்டம் சமாப்தியாயிற்று.

அடுத்தகூட்டம் வைகாசிமீ 22உ சனிக்கிழமை பிற்பகல் ஸ்ரீமதி அ. விசாலாட்சிப்பிள்ளையின் தலைமையின்கீழ்க்கூடியிற்று. பின். ஸ்ரீமதி. செகராசசிங்கம் வடிவாம்பாள் "காரைக்காலம்மையாரின்,, திவ்வியசரித்திரத்தை சிறந்த சொற்சுவைபொருட்சுவையோடு வாசித்தனர். அதற்கு ஸ்ரீமதி க. தங்கம்மாள், ஸ்ரீமதி. வே. பரமபாக்கியம் ஸ்ரீமதி வ. புவனேஸ்வரி, ஸ்ரீமதி. நீலாயதாட்சி ஸ்ரீமதி. தா. பொன்னம்மாள் ஸ்ரீமதி. பா. கமலாம்பிகை ஸ்ரீமதி. கு. தெய்வநாயகிமுதலிய அங்கத்தவர்களாலும் பாடசாலைச் சிறுமியொருத்தியாலும் குறிப்புரை கூறப்பட்டது. பின் பிரம்மஸ்ரீ க. சிவ. பஞ்சாட்சரக்குருக்களவர்களின் புத்திரி. திருமகள். இரத்தினசுந்தரம்மாள் ஓர் வேடிக்கைக்கதையைச் சொல்லிச்சபையோரை மகிழச்செய்தனர்.

கடித.

குலத்துக்கீனம் கோடரிக்காம்பு.

கோடரிக்குள்ளே மாமரம் நுழைந்து தன் கோத்திரமெல்லாம் நாசமாக்குவதற்கொப்ப எம் தமிழ்ச்சாதியார் ஐரோப்பிய நாகரீகத்தைப் பின்பற்றத் தொடங்கின அன்றே தமிழ் மாதாவுக்கும் சைவசமயத்திற்குந் துரோகஞ் செய்பவராகிவிட்டார்கள். இதுவுமல்லாமல் எங்களுடைய பழக்க வழக்கங்கள் ஆசார அனுஷ்டானங்களையே எங்கள் பிள்ளைகளும் பின்பற்றுவர். ஆகையால் சைவசமயத்தின் மேன்மையை என்னென்று அறிவார்கள். சமயாசாரங்களை எப்படி அனுஷ்டிப்பார்கள். தற்காலத்திலுள்ள உபாத்தியாயர் உபாத்தியாயினிகளுமாகப் பள்ளிக்கூடப்பிள்ளைகளைக் கெடுத்துவிடுகிறார்கள். குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்வது போல எம் தமிழ்ப் பெண்மணிகளுக்குக் கல்வி அவசியம் தேவை என்று கல்வி கற்பித்துவந்த ஆசிரியர் ஆசிரியைகள் இப்பொழுது அன்னிய நாகரீகங்களையும் அன்னிய பாஷைகளையும் கற்பித்துக் கெடுக்கிறதுமல்லாமல் அனேக சனங்கள் குழுமியிருக்குங் கூட்டங்களிலே நாடகம் நடிக்கவும் பழக்கிவிட்டு வேடிக்கை காட்டுகிறார்கள். ஐயகோ! காட்டு மனிதர் போன்ற பெற்றோரும் மனம் பொறுத்து விடுகிறார்களே, இப்படி நடிக்கும் பெண்மணிகளுக்கு அச்சம் மடம் நாணம் பயிர்ப்பென்னும் நாற் குணங்களும் எப்படி அவர்களுள்ளத்திலுறையும். இவர்களை இல்லாள் என்னும் பதவியில் எப்படி வைக்கலாம் பெண்களுக்காகிய எல்லா நற்குணங்களும் பொருந்தப்பெற்ற ஒரு இல்லாள் அகத்திருக்கவில்லாததொன்றுமில்லையாம். முற்காலத்திலே வயோதிப ஸ்திரீகளும் நாடகங்கள் கூட்டங்களுக்குப் போவதில்லை. இப்போது எல்லாம் எங்கள் சமயக்கோட்பாடுகளுக்கு மாறான செயலையே செய்ய எத்தனிக்கிறார்கள். தற்காலத்து ஆசிரியருக்கு இவ்வளவு மதி ஏறியபொழுது அவர்களின் கீழ் இருந்து கல்வி பயிலும் மாணவர் மாணவிகள் மீது குறை கூறுவதினாற் பயனென்ன. எம் தமிழ்ப் பெண்மணிகளுடைய கூட்டங்கள் பிரசங்கங்களிலும் பேசுவது அன்னிய பாஷையையே. ஆனால் எங்கள் தமிழ்ப் பாஷையின் மாண்பை எங்கே பேசுவார்களோ தெரியவில்லை. இந்தச் சமையங்களிலே தமிழ்ப் பாஷையில் பிரசங்கித்தால் இவர்களுக்கு வரும் இகழ்ச்சியாதோ. தமிழ் மாதாவை ஒரு மூலையில் சிறையிருத்தி இவ்வளவாக ஈனஞ் செய்வது பெருமையாமா. மாதா வயிறெரிய வாழா ஒரு நாளும் என்றபடி. எம்மக்கள் எப்படி வாழலாம். இம்மை மறுமை இரண்டினுக்கும் பயனுடையவராய் இருப்பதைவிட்டு அவை இரண்டிற்கும் பயனற்றவர்களாய் இருப்பது மானிடர்க்கழகா? ஐரோப்பிய நாகரீகங்களைப் பின்பற்றி அப்பாஷையையே பேசி அவர்களுடைய சாரை வீச்சுக்களையே கதியென்றிருக்குந் தமிழ்ப் பேதையர் ஐரோப்பியருக்குத் தங்கள்மீது இருக்கும் வெறுப்பை அறியார் போலும். சில நாட்களுக்கு முன் முதலாம் வகுப்பிற் பிரயாணஞ் செய்த இரு வகுப்பினருக்கும் நடந்த விஷயத்தைப் பத்திரிகை வாசிப்போர் நன்கு விளங்குவர். கழுதைக்குபதேசங் காதிலே யோதினாலும் அபயக்குரலாயேயிருக்கும் என்ற பழமொழிப்படி எவ்வளவு சற்புத்திகளை ஆன்றோர் எடுத்துக் கூறினாலும் அவை துர்ப்புத்தி யென்றே எண்ணிவிடுகிறார்கள். தற்காலத்தில் சில ஐரோப்பிய பெண்கள் தங்கள் குடுமிகளை ஆண்மக்களுடைய சிரசைப் போல் கத்தரித்துவிடுகிறார்கள். அந்நாகரீகங்களைப் பின்பற்றும் நம் தமிழ்ப் பெண்மணிகளுந் தங்கள் குடுமிகளைக் கத்தரித்துவிடுகிறார்களோ வென்று சைவ சமயாபிமானிகள் நினைந்து நினைந்து வருந்துகின்றார்கள்

சகோதர சகோதரிகளே சற்று ஆறுதலாய் யோசித்து வீண் ஆடம்பரங்களிலே செலவழிக்கும் ஒரு நிமிஷந்தானும் திரும்ப எங்களுக்குக் கிடைக்குமா? வினைப்போகம் முடிந்தால் தினைப்போதளவும் எங்களுடைய ஆன்மா தரியாது. எப்போதாயினுங் கூற்றுவன் வருவான். ஆகையால் ஆங்காலமெல்லாம் அவமேகழித்துச் சாங்காலத்திலே சங்கரா சங்கரா என்பதினாற் பயனென்ன. எங்களுடனே ஒருவரும் வாரார், ஒன்றுக்கும் உதவாத காதற்ற ஊசியும் வாராது. நாங்கள் செய்த நன்மை தீமையே எங்களைப் பின் தொடரும். ஆகையால் ஒவ்வொரு நிமிஷமும் எங்களுக்கு மரணவேளையாயிருக்கிற தென்றெண்ணி, மனதை நல்வழியிலே திருப்புங்கள். நவரத்தினங்களால் ஆக்கப்பட்ட ஆபரணங்களையும் விலையுயர்ந்த பட்டாடைகளையும் அணிந்தாற் போதுமா? சமயாபிமானம் தேசாபிமானம் சாதியபிமானம் பாஷாபிமானமாகிய யாவும் வைத்துப் பூட்டப்பட்ட பணிப்பெட்டியாயிருங்கள். இச்சகல நற்குணங்களும் எங்களுள்ளத்திலுறையும்படி குஞ்சிதபாத நடராசப் பெருமானை உள்ளன்போடு அந்தியுஞ் சந்தியும் வேண்டுவோமாக.

‘ தூர் பனையான்”.

அறிவித்தல்.

இதன்கீழ்க் கைக்கீறிடும் புங்குடுதீவு கிழக்கு நாகப்பர் ஐயம்பிள்ளையாகியநான் கைக்கீறுகாரனாயிருப்பதாலுமென துபெயருக்குமுடித்திருந்த அறுதிஉறுதிகள் இற்றைக்கு ஏறக்குறைய ஒரு மாசத்துக்குள் களவுபோயிருப்பதினாலும் என் பெயரிலுள்ள ஆதனங்களை மறுபேர் நானேகைக்கீறிட்டதாக அறுதி முதலிய எவ்வகையானசாதனங்களும் எந்தநொத்தாரிசமுகதாவிலாகுதல் சொல்லப்பட்ட ஒருமாசத்துக்குமுன் அல்லது பின் நிறைவேற்றப்பட்டிருந்தாலும் அவைகள் பொய்யானவைகளாகும் என்பதை இத்தாலறிவிக்கின்றேன்.

புங். கிழக்கு,
29-5-26. நா. ஐயம்பிள்ளை கைக்கீறு.
(Mis 870)

வதிரித் தேவரையாழிச் சைவவித்தியா சாலைத் தருமகைங்கரியம்.

ஐயா!

டி வித்தியாசாலையின் ஈடேற்றத்தைக் கருதியும் எம் சைவவித்தியாசாலை அபிமானிகளாகிய தர்ம்மகர்த்தர்களிடம் பொருள் சேர்க்கக் கருதியும் சமயாபிமானமே காரணமாக எங்களால் ஸ்தாபிக்கப்பட்ட இப்பாடசாலைக்கு அரசினருதவும் நன்கொடைப்பணம் உபாத்திமார் வேதனத்துக்குத்தானுங் காணாதென்றும் சென்ற வருடம் எம்மால் ஒருகடிதம் இப்பத்திரிகைமார்க்கமாகவெளிப்படுத்தப்பட்டது. இன்னும் சிலஅபிமானிகளாலும் இந்துசாதனம் ஆங்கிலதமிழ்பத்திரிகாசிரியர்களாலும் மைது கடிதத்தை அனுவதித்து வேறுதிகதிகளில் இருபத்திரிகைகளிலும் எழுதப்பட்டது.

சென்றவருடம் அடியேன் இலங்கையிற் பலபாகங்களிலுமுள்ள தர்மகர்த்தர்களைத் தரிசித்துப் பொருள்யாசிக்க வெண்ணியும் புறப்பட்டுக்கொள்ள வசதியில்லாமையினாலும் சுகவீனங்களினாலும் தடைபட்டு, தற்போது டி காரணமாக அடியேன்புறப்பட்டு சகல இடங்களுக்கும் பொருள்யாசித்துப்பின் சிங்கப்பூர்மலாய்நாடுமுதலியஇடங்களுக்கு போகின்றேனென்பதை இத்தால் விண்ணப்பஞ்செய்கின்றேன்.

இங்ஙனம்
டி தருமகைங்கரியத்தைப்பூண்டுவரும்
அடியவனாகிய கா. சூரன்
வதிரிதேவரையாழிச்சைவவித்தியாசாலை.
26-5-26.

இந்துசாதனபத்திரிகாசிரியர் அவர்களுக்கு

ஐயா,

தங்கள் இந்துசாதனம் எண்பதாம் இலக்கப் பத்திரிகையில் இந்த அக்ஷயவருஷம் பிறந்ததற்காகச் சோபனங் கூறிய விஷயத்திலே சென்ற குரோதன வருடம் நடைபெற்ற பலவித சற்கருமங்களையும் நன்மையாகக் காட்டி டி வருடத்திற்றானே இந்த யாழ்ப்பாணத்திலுள்ள கள்ளுச் சாராயக் கடைகளும் அந்நிய நாட்டு உயர்தரக் குடிவகைக் கடைகளும் ஆங்காங்குள்ள மதுவிலக்குச் சங்கத்தாரின் அரிய பெரிய முயற்சியினாலும் பொருட்செலவினாலும் நீக்கப்பட்டனவெனவும் சோபனங் கூறியிருந்தீர்கள்.

தாங்கள் கூறியபடி காரியம் உண்மையேயாயினும் குறித்த யாழ்ப்பாணப் பகுதிகளில் கள்ளுத் தவறணைகளின் மேற்கூரைகள் அகற்றப்பட்டதும் மற்றும் குடிவகைகள் இருந்தவிடம் விட்டகன்றதுமேயன்றிச் சொல்லப்பட்ட குடிவகைகள் முன்னரிலும் பார்க்கக் கூடியவிகிதம் குறித்த பகுதிகளில் இருக்கின்றனவென அறிவீர்களாக.

அதாவது மதுக்கடைகள் இங்கே இருக்கும் காலங்களிற்போலக் குடிகாரர் கூட்டங்கூட்டமாகப் போகிறார்கள். இவர்கள் போகும் பவனியைக்கண்ட சிலர் நீங்கள் எங்கேபோகிறீர்களென்றுகேட்டால் சமீபத்திலுள்ள ஒருஆளைக் காணப்போகிறோமென்றும் ஒருருக்குப் போகிறோமென்றும் அச்சத்தோடும் பயபக்தியோடும் சொல்லிப்போய், மீண்டு வரும் போது அவர்கள் போகும்போதிருந்த சகல குணங்களும் மாறுபட்டு அச்சமற்றும் பாட்டோடும் ஆட்டத்தோடும் தூஷணைகளோடும் இங்கே மதுக்கடைகளிருந்தகாலத்திற்போல நடித்துக் கொண்டே தங்களில்லங்களுக்குத் திரும்புகிறார்கள்.

ஐயா பத்திரிகாசிரியரவர்களே! இந்தவிஷயமாகத் தங்கள்பத்திரிகை வெகுகாலம்பலமுறையும் குமுறியதெங்கே; மதுவிலக்குச் சங்கத்தார்கள் பட்டபாடுகளும் விட்ட செலவுகளும் எங்கே; இப்போது நடக்கிற மகாமாய சமபிரதாயங்களெல்லா மிங்கேதான் கள்ளுச் சாராயக் குத்தகைகளை வாங்கி நடத்தியவர்களும் மரமேறிகளும் அக்காலம் அரசினர்க்கும் ஊரவர்களுக்கும் பயந்திருந்தார்கள். இக்காலத்திலோ குடிகாரர் வெறிவர முற்றி அதிகமாகப் பயப்படுகிறார்கள்.

அதாவது அப்போது நாங்கள் கள்ளுச்சாராயம் வேண்டாமென்றோமே, இப்போது அரசினராலும் ஊரவர்களாலும் மரமேறிகளாலும் அவமானமுறப்பேகின்றோமே எனச் சிந்தித்துப் போகுவதால் இவர்களைக்கண்ட மது விற்போருக்கு உதவியாக நிற்போர் வலிந்து கூட்டிக்கொண்டுபோய் அவர்களுக்கு மதுவை விற்கிறார்கள்.

அதாவது அரசினருக்குக் குத்தகைப்பணமில்லாததும் மதுபானத் தீர்வை உத்தியோகத்தருக்குச் சம்பளங்கொடுக்கிறதும் நஷ்டம், மரமேறிகள் அனுப்புண்டு கள்ளிறக்கி எங்கி எங்கி விற்றும் இடையிடையே குற்றங் கொடுக்கிறதும் அவர்களுக்கு நஷ்டம், ஊரவர்களாகிய குடிகாரர் பத்துச்சதம் விற்ற கள்ளுக்கு பதினைந்து சதம் கொடுத்துஞ் சுண்ணாம்புக் கருப்பநீர் தண்ணீர் முதலிய கலவையோடு குடித்து உதரத்தாலும் பணத்தாலும் நஷ்டப்படுகிறார்கள்.

இனி மரியாதைக்குடன்பட்ட மரமேறிகள் நிகழும் குதூகலங்களைப் பார்த்துப் பெருமூச்சு விடுகிறார்கள். மனதாரக் கள்ளுக் கூடாததாயினும் அவர்களுக்கு முன்கூட்டப் பழக்கத்தில் வழக்கமானமுயற்சியாகவேயிருந்தது. இனிமேலிந்தவிஷயம் எப்படிநடக்குமோ தெரியவில்லை. தங்களிந்துசாதனப்பத்திரிகையே இன்னுமிந்த விஷயத்தில் சித்தையிட் டோலமிடவேண்டுமெனக் கோருகின்றேன்.

இங்ஙனம்,
A. S. சாவெட்டி.

[இக்கடிதத்திற் சிற்சிலபாகங்கள் தக்க ஆதாரமின்மையால் வெளியிடப்படாது தவிர்க்கப்பட்டன. பத்திராசிரியர்.]

காணி விற்பனவு விளம்பரம்.

பழையிலுள்ள வெட்டுக்காடெனப்படுந் தென்னந் தோட்டம் விற்பனைக்கிருக்கின்றது. இது 180 ஏக்கர் கொண்டது. பழைப்புகைரதஸ்தானத்திலிருந்து 2. மயில் தூரத்தில் யாழ்ப்பாணம் கண்டி ரோட்டிற்குச்சமீபமாக இருக்கின்றது, இதற்குட் கல்வீடுமொன்று உண்டு, தோட்டத்திற்குச் செல்வதற்குப் பெரிய தெருவிலிருந்து போகும் ஒருகுறுக்குத்தெருவுண்டு, மற்றும் விபரங்கள் அறியவேண்டில், பிறக்ரர். ஸ்ரீ. M.C. துரைரத்தினம் அவர்களிடத்தும் அறிந்துகொள்ளலாகும்.

(M. 47.) V. சண்முகலிங்கம்.

ஆர். பி சேதுப்பிள்ளை பீ. ஏ., பீ. எல்.
எழுதிய

மூன்று செந்தமிழ் வசன நூல்கள்.

1. தமிழ் நாட்டு நவமணிகள்: இதில் ஆதிரையார், விசாகையார், மருதியார், கோப்பெருந்தேவியார், மணிமேகலையார், கண்ணகையார், புனிதவதியார், மங்கையற்கரசியார் திலகவதியார் முதலிய 9 பெண்மணிகளின் சரிதைகள் உள்ளன விலை அணா 8.

2. திருவள்ளுவர் நூல்நயம்: அரிய பெரிய ஆராய்ச்சி. இந்நூல் திருவள்ளுவர் பெருமை, திருக்குறள் பொதுநூல், சமயப்பொது நூல், அறத்தின் திறம், அரசியல்முறை, இன்ப இயல், திருக்குறளின் உவமைத்திறம், திருவள்ளுவரும் பரிமேலழகரும் ஆகிய 8 அரிய பெரிய வியாசங்களையுடையது. விலை ரூ. 1.

3. சிலப்பதிகாரக்கதை: இதில் சிலப்பதிகாரக் காப்பியத்தின் கதையைச் சுருக்கமாக இனிய எளிய நடையில் எழுதியிருக்கிறது. விலை அணா 8 புத்தக ஆர்டருக்கு “தாசியின் ரகசியங்கள்” என்ற நாவலும், காலெண்டரும் இனாம். தமிழ்க்காட்லாகீ இனாம்.

ஒற்றுமை.

சித்திரப்படங்களுடனும், விநோதப்படங்களுடனும் வெளிவரும் ஒரு தமிழ் மாதாந்தப் பத்திரிகை. பலபண்டிதர்களால் எழுதப்படும் அரிய விஷயங்களைத்தன்னகத்துக்கொண்டது. தமிழ்மொழியின் வளர்ச்சி கருதி வெளிவருவது. வருடசந்தா உள்நாடு ரூபா 1 வெளிநாடு ரூபா 1—4. சந்தா முன்பணம் அனுப்பினால் 4 அணா லாபமாகும். 6-வது தொகுதி 1925ஞ் நவம்பர்மீ முதல் ஆரம்பம் மாதிரிப்பிரதி இனாம்.

‘ஒற்றுமை’ ஆபீஸ்,
சைதாப்பேட்டை (இ. சா. மதராஸ்.
(Y 55 A)

விற்பனவு விளம்பரம்.

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டின் 18960 ம் இலக்க வழக்கில் 1926 ஞ் சித்திரைமீ 29 ந் தேதியைக் கொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழேவிபரிக்கப்பட்டிருக்கும் காணி 1926-ம் ஞ் ஆனிமீ 12-ந் தேதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கமும் 4 மணி தொடக்கமும் அந்தந்தக்காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

விபரம்.

அராலி தெற்கு சிற்றம்பலம் வேலுப்பிள்ளை
வழக்காளி.
Vs.
சங்குவேலி 1 காசிநாதர் வைத்திலிங்கம்
மார்க்கண்டு முதலியாரும்,
2 காசிநாதர் வைத்திலிங்கம்
சுப்பிரமணியமும்
எதிராளிகள்.

1. யாழ்ப்பாணம் சீதாரியிலிருக்கும் நடுப்பண்டசாலை அல்லது வங்கிவீடும் சொர்ணமாளிகையும் பா நில. இலா: 5 குளி. 12 கிட்டங்கிஅறைகளும் மற்றும் கட்டிடங்களும் கிணறும் எல்லை கிழக்கு முதலார்குறுக்குத் தெரு, வடக்கு பாங்ஷால்ரோட்டு அல்லது கிட்டங்கித்தெரு, மேற்கு ஈயின முகம்மது நிரைக்காயர் மதார்சாய்வு மரைக்காயருக்கும் மறுபேருக்குமுடையஆதனம், தெற்கு கடற்கரைத்தெரு. இந்த ஆதனம்இரண்டாம் ஈடு.

2. உடுவிலிறை பனிச்சத்தம்பிலும் கொல்லன் கலட்டியும் பா. நில. இலா. 25 குளி 12. வீடும் மற்றும் கட்டிடங்களும் கிணறும் வான்பயிர் செய்பயிரும். எல்லை கிழக்கு சிதம்பரப்பிள்ளை முருகேசருக்கும் மறுபேருக்கும் வேலுப்பிள்ளை பொன்னையாவுக்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம், வடக்கு பொன்னையாபெண் அன்னம்மாவின் ஆதனம், மேற்கு ரோட்டு தெற்கு வேலுப்பிள்ளை பொன்னையாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனமும் ஒழுங்கையும்.

யாழ்ப்பாணம் B. EMMANUEL
10-5-26. கொம்மிஷனர்.
(Mis. 871)

விளம்பரம்.

பாலைமரங்களும், தீராந்திகளும், முதிரை மரங்களும், தீராந்திகளும், பலகைகளும், கருங்காலி மரங்களும், பனைமரங்களும், சிலாகைகளும் தேவைக்குத் தக்கபடி விற்பனைக்கிருக்கின்றது. ஆடர்களுக்கும் கொடுக்கப்படும்.

யாழ்ப்பாணம், ச. கந்தையாபிள்ளை,
17—12—25. உவைமன் ரோட்டு,
(Y. 49) நல்லூர்.

இரவில் மணிபார்க்கும் ரேடியம்.

18 காரட் ரோல்ட் கோல்ட் பொன் டயல்.

8 மூலைக் கெடியாரங்களில் இதுதான் முதற்றரமான கையிற்கட்டும்கெடியாரம் No. 105.

இரவில் மணிபார்ப்பதற்கு இக்கெடிகாரத்திற்கு விளக்கு வெளிச்சம் வேண்டியதில்லை,



இதில் ரேடியம் என்னும் ஓர்வித வஸ்துவை நம்பர்களிலும் முட்களிலும் சேர்த்திருப்பதால் இரவில் மணி நன்றாய்த்தெரியும். இருட்டு எவ்வளவு கருக்காய் இருக்குமோ அவ்வளவிற்கும் எண்கள் சூரிய வெளிச்சத்தைப்போல் பிரகாசிக்கும். இது வெகுகாலம் வரை நன்றாய்ப் போகக்கூடியது. உயர்ந்த சாமான்களால் தயாரிக்கப்பட்டது. இது சரியான டைம் காட்டக்கூடியது. இதை பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள். வெகு அழகாயிருக்கும்.

டி 18 காரட் ரோல்ட் கோல்ட் பிளேட் இரவில் மணிகாட்டும் கெடியாரம் முன்விலை ரூபா 15-0-0. தற்சமயம் குறைந்தவிலை ரூபா 7-8-0. ரேடியம் இல்லாதது 6-8-0.

No. 110. 5 வருடம் காரண்டியமுள்ள ரோல்ட் கோல்ட் பிளேட் பொன் கெடியாரம் விலை ரூபா 10-0-0. ரேடியம் உள்ளது 11-0-0

விலாசம்: ரேடியோ வாச்கம்பெனி,
போஸ்ட்பாக்ஸ் நம்பர் 142, மதராஸ்.
(Y. 53.)

சாலாமிஸ்திரி லேகியம்

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொது ஜன நலத்தைக்கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாரூ, சாலாமுஸ்லி, சப்பேமுதஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது,

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்தலேகியத்தின் விலை றூத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரைறூத்தலுக்கு ரூபா ௧0. கால் றூத்தலுக்கு ரூபா ௫ தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினால் முன் மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதாரவைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்டு,
மட்டுக்களப்பு,
(M. 36.) சிலோன்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க
மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா
துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க
நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவ
நீதிவிளங்குக வுலகமெல்லாம்.

Printed & published by Pandit V. T. Sambandhan, for and on behalf of the Proprietors, the Jaffna Saiva Paripalana Sabai, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai.